DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : முருகன் | Father/Husband Name : குழந்தைவேல் |
| Age : 62 | Village : டி.கல்லுப்பட்டி |
| Taluk : | Calling : சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 4, 2026 11:55 AM

(Accused Present)

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் டி.கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் 2024 ஆம் ஆண்டு மே மாதம் மதுரை மாவட்டம் வில்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன்.

2. இதற்கு முன்பு சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, 30.05.2019 ம் தேதி காலை 08.30 மணிக்கு சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது பத்திரகாளி, க/பெ. கார்த்திக் சங்கர், பைபாஸ் ரோடு, சாத்தூர் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மை கேற்ப சாத்தூர் நகர் காவல் நிலைய குற்ற எண்.336/2019, பிரிவுகள் 279, 304(A) இதசவாக வழக்கு பதிவு செய்தேன். <u>**(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**</u>

3. நகர் காவல் நிலைய ஆய்வாளர் (வட்ட காவல் ஆய்வாளர்), சாத்தூர் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.132/2019, பிரிவு 279, 304(A) இதச வழக்கில் விசாரணை மேற்கொண்டு உள்ளதால் ஆய்வாளர் உத்தரவு படி இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 30.05.2019 ம் தேதி 09.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனிஸ்வரன், சம்சுதின், ஆகியோர் முன்பு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். <u>**(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**</u> சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து 161(3) வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. அதன் பின் வாதி பத்திரகாளி, கார்த்திக் சங்கர், ரமேஷ், ராமசாமி, குமார், கோசலை ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதன் பின்னர் சாத்தூர் அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் இருந்த இறந்து போன கருப்பசாமி, வயது 67, த/பெ. இருளப்பன், ஆண்டாள் புரம், சாத்தூர் என்பவரின் உடல் மீது 30.05.2019 தேதி 11.15 மணி முதல் 12.30 மணிவரை பஞ்சாயத்தார் முன்னைலையிலும், சாட்சிகள் முன்னிலையிலும் பிரேத விசாரணை மேற்கொண்டு, அறிக்கை தயார் செய்தேன். <u>**(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**</u> அதன் பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக முதல் நிலை காவலர் R.சுந்தர் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். நான் என்னுடைய முதல் விசாணையை முடித்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர்

மேற்பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

5. நான் 30.05.2019ம் தேதி காவல் ஆய்வாளரின் உத்தரவின் படி காலை 9.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். அதன்பிறகுதான் நான் இந்த வழக்கில் உள்ள முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என்றால் இல்லை. இந்த வழக்கு விபத்து 29.05.2019 ஆம் தேதி இரவு 11 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். வழக்கு விபத்து தேசிய நான்கு வழிச்சாலையில் வைத்து நடைபெற்றது என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் விபத்து நடைபெறும் போது சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு ஹைவே பட்ரோல் வாகனத்தில் இருந்து தகவல் கூறுவது வழக்கம் என்றால் சரிதான்.

6. புகார் கொடுத்த நபர் எங்கள் காவல் நிலையத்திற்கு எப்பொழுது வந்தார் என்றால் 30.05.2019 ஆம் தேதி காலை 8:30 மணிக்கு வந்தார். புகாரை எழுதியது யார் என்றால் அவர் காவல் நிலையத்திற்கு வரும் பொழுது எழுதிய புகார் கொண்டு வந்தார், யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது. அந்த புகாரை எங்கு வைத்து எழுதினார் என்பதும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதிலிருந்து 09.30 மணி நேரம் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த கால தாமதத்திற்கான காரணம் முதல் தகவல் அறிக்கை 8 வது காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

7. வழக்கு விபத்து எங்கு நடைபெற்றது என்றால் விருதுநகரில் இருந்து கோவில்பட்டி செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையில், தாயில்பட்டி விலக்கு அருகே, சாலையின் கிழக்கு பக்கத்தில் நடைபெற்றது. நான் இந்த வழக்கில் தயார் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் வழக்கு சம்பவம் தாயில்பட்டி விலக்கில் வைத்து நடைபெற்றதாக கூறியுள்ளேனா என்றால் தாயில்பட்டி மேற்படி தேசிய நெடுஞ்சாலைக்கு மேற்குப் பக்கத்தில் இருக்கிறது, இந்த வழக்கு சம்பவம் தேசிய நெடுஞ்சாலையின் கிழக்குப் பக்கத்தில் உள்ள சாலையில் கிழக்குப் பக்கம் நடைபெற்றது , நான் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

8. சாத்தூரில் உள்ள கிருஷ்ணா மருத்துவமனை எனக்கு தெரியுமா என்றால் நான் ஆறு மாதம் மட்டுமே சாத்தூரில் பணியாற்றியதால் எனக்கு தற்போது சரியாக ஞாபகம் இல்லை. தாயில்பட்டி மற்றும் வெம்பக்கோட்டை செல்லக்கூடிய விலக்கு பகுதியில் வைத்து இந்த வழக்கு விபத்து நடைபெறவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அந்த விபரத்தை ஆய்வாளருக்கு தெரிவிக்கும் வரை இந்த வழக்கின் எதிரி காவல் நிலையத்தில் இல்லை என்றால் சரிதான். புகாரில் அறிவேன் சாட்சியாக யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. அ.சா.1 – பத்திரகாளி என்னுடைய விசாரணையின் போது, அவர் சாத்தூரில் உள்ள தென் வடல் சாலை வழியாக சம்பவ இடத்திற்கு சென்றதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக நான் கூறும் தாயில்பட்டி, வெம்பக்கோட்டை விலக்கு தான் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து வாகனங்கள் செல்வதற்காக விடப்பட்டுள்ள பிரதான சாலை என்றால் சரிதான். அந்த நான்கு வழிச்சாலையில் மேற்படி விலக்கு பகுதியில் இருந்து வெள்ளக்கரை சாலை வரை உள்ள பகுதிகளில் தடுப்பு கம்பி வைத்து அடைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்வதற்கு முன்பு நான் இந்த வழக்கில் சாட்சி யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், புகார் மனு பெறுவதற்கு முன்பு இந்த வழக்கு சம்பந்தமாக எவ்விதமான தகவலும் கிடையாது என்றாலும் சரிதான்.

10. வழக்கு விபத்து நடைபெற்றதாக கூறப்படும் பகுதியில் எப்பொழுதும் போக்குவரத்து போலீசார் இருப்பார்கள் என்றால் அவர்கள் இரவு 10.00 மணிக்கு அவர்களுடைய பணியை முடித்து விட்டு சென்று விடுவார்கள். இந்த வழக்கில் புகார் மனு பெறப்படுவதற்கு முன்பு வழக்கு சம்பவம் நடைபெற்றது தொடர்பாக புற காவல் நிலையத்தில் இருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ அல்லது சாத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்தோ தகவல் எதுவும் எனக்கு கிடைத்ததா என்றால் வாய்மொழியாக தகவல் காவல் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்று, விபத்து நடைபெற்றதாக நான் 30.05.2019 ஆம் தேதி காலை காவல் நிலையத்திற்கு சென்றபோது கேள்விப்பட்டேன். எங்கள் காவல் நிலையத்திற்கு வாய்மொழியாக விபத்து நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் அதன் அடிப்படையில் சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முடியாது என்பதால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

11. வாய்மொழியாக கிடைக்கப்பெற்றதாக கூறும் மேற்படி தகவல் தொடர்பாக ஆய்வாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் இல்லை. குற்ற சம்பவத்திற்காக வாய்மொழியாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றாலும், அதை ஆய்வாளரிடம் தெரிவித்திருக்க வேண்டும் என்றாலும், நான் சட்டப்படி செய்ய வேண்டிய என்னுடைய கடமையை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

12. அ.சா.1 – பத்திரகாளி கொடுத்த புகார் மற்றும் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில், அவருடைய அப்பா மீது வாகனம் மோதியதும் அவருடைய அப்பாவை சற்று தொலைவில் தூக்கி போட்டது என்று கூறியுள்ளாரா என்றால் கார் மோதியதில் கீழே விழுந்துவிட்டார் என்று கூறியுள்ளார். அ.சா.1 – பத்திரகாளி கொடுத்த புகார் மற்றும் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில், அவருக்கு முன்பாக 2 அடி தொலைவில் அவருடைய அப்பா நடந்து சென்றார் என்று கூறியுள்ளாரா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற இடத்தின் அருகே உள்ள கடைக்காரர்களை சம்பவ சாட்சியாக நான் விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அதனால் தான் சம்பவ இடத்தின் அருகே உள்ள கடைக்காரர்களை சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

13. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும், அது வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 4, 2026 12:32 PM

Judicial Magistrate 2, Sattur